## செவ்வந்தி

1.கரு அசுவினி, மேக்ரோசைஃபோனியெல்லா சென்போர்னி மைசஸ் பெர்சிகே

**சேதத்தின் அறிகுறிகள்**

- இலையின் அடிப்பாகம் மற்றும் நுனித்தண்டுகளிலிருந்து சாற்றை உறிஞ்சி சேதப்படுத்தும்.
- செடியின் வளர்ச்சிக் குன்றிவிடும்.
- இலைகள் சுருண்டுவிடும்.
- இலைகள் வாடும்.

**பூச்சியின் விபரம்**

- அசுவினி சாக்லேட் பழுப்பு நிறமுடையது.

**கட்டுப்படுத்தும் முறைகள்**

- 1 லிட்டர் தண்ணீரில் 15 கிராம் வெர்ட்டிசீலியம் ஸக்கானி கலந்து தெளிக்கவும்.
- 1 லிட்டர் தண்ணீரில் 1 மிலி மாலத்தியான் (அ) 2 மிலி எண்டோல்ஃபான் கலந்து தெளிக்கவும்.

2. இலைப்பேன் : மைக்ரோசெபலோதிரிப்ஸ் அப்டாமினாலில்

- இலைப்பேன்கள் மலர்க்கொண்டையை சேதப்படுத்தும்.
- பூவிதழ் மற்றும் அல்லி இதழ்களைச் சுரண்டி தின்று சேதத்தை உண்டாக்கும்.
- கடும் தாக்குதலின் போது பூவின் அனைத்துப் பாகங்களையும் தாக்கி சேதப்படுத்துகிறது.

கட்டுப்படுத்தும் முறைகள்

நாற்றாங்காலில் கார்பரில் மற்றும் டைகோபால் கலந்த கலவையைத் தெளித்து கட்டுப்படுத்தலாம்.

3. நாவாய்ப்பூச்சி : சிரியோட்டைடிஸ் பலிடிஃபர்

சேதத்தின் அறிகுறிகள்

- இளந்தளிர் மற்றும் இலைப்பகுதிகளில் சாற்றை உறிஞ்சி சேதப்படுத்தும்.

பூச்சியின் விபரம்

- பச்சைக் கலந்த மஞ்சள் நிறத்தில் இருக்கும் கண்ணாடிப் போன்ற பழுப்பு நிற இறக்கை இருக்கும்.

கட்டுப்படுத்தும் முறைகள்

- பூச்சித் தாக்கிய மொட்டு மற்றும் இலைகளை சேகரித்து அழிக்கலாம்.
- 1 லிட்டர் தண்ணீரில் 1.5 மிலி டைமீதோயேட் அல்லது மாலத்தியான் 2 மிலி / லிட்டர் கலந்து தெளிக்கவும்.

4.பச்சைப்புழு, ஹெலிகோவெர்பா ஆர்மிஜீரா

சேதத்தின் அறிகுறிகள்

- பூக்களை தின்று சேதப்படுத்தும்.
- இளம்புழுக்கள் இளந்துளிர்களை உன்னும்
- முதிர்ந்தபுழுக்கள் பூவிதழ்களிகளை உன்னும்

- இப்புழுக்கள் பூவிணைத் துளைத்து தலைப்பகுதியை உட்செலுத்தி உடலின்பாதி பின் பகுதியை வெளியே வைத்தக்கொண்டு சாப்பிடும்.

âச்சியின் விபரம்:

முட்டை: பெண் அந்துப்âச்சி சொரசொரப்பான வெள்ளைநிற முட்டைகளை தனித்தனியே இளம் இலையின் மேற்பகுதியில் இடுகின்றது.

புழு : பச்சை மற்றும் பழுப்பு நிற வேறுபாடுகளை தோற்றுவிக்கும்

வளர்த்த புழுக்கள் பச்சை நிறமாகவும் உடலின் பக்கவாட்டில் சாம்பல் நிறக் கோடுகளுடன் காணப்படும்.

கூட்டுப்புழு : கூட்டுப்புழு பழுப்பு நிறத்தில், மண், இலை மற்றும் பண்ணைக் கழிவுகளில் காணப்படும்.

âச்சி : பெண் அந்துப்âச்சி வெளிர் பழுப்பு நிறமாக இருக்கும்.

ஆண் அந்துப்âச்சி வெளிர் பச்சை நிறத்தில் V - வடிவக் கோடுகள் இருக்கும்.

முன் இறக்கை : பழுப்பு நிற முன் இறக்கையில் V - வடிவக் கோடு இருக்கும்.

பின் இறக்கை: ஓரப்பகுதி அடர்ந்த பழுப்பு நிறத்தில் இருக்கும்.

கட்டுப்படுத்தும் முறைகள் :

- தாக்கப்பட்ட பூ மற்றும் வளர்ந்த புழுக்களையும் சேகரித்து அழிக்கவும்.

- இனக்கவர்ச்சிப் பொறி ஹெலிæர் ஹெக்டேர்க்கு @15 வீதம் வைக்கவும்.
- முட்டை ஒட்டுண்ணிப்பான ட்ரைக்கோகிராம்மா கைலோனிஸ் ஹெக்டேருக்கு @ 50,000 எனும் அளவில் வாரம் ஒரு முறையாக 6 முறை விடவேண்டும்.
- கிரைசோப்பெர்லா கார்னியா எனும் இரை விழுங்கிப் âச்சிகளை நட்ட 30 - ம் - நாள் முதல் வாரம் ஒரு முறை @ 50,000 முட்டைகள் அல்லது புழுக்களை விட வேண்டும்.
- ஹெலிகோவெர்பா நிäக்ளியர் பாலி ஹெட்ரோசிஸ் வைரஸ் [எச்.எ.என்.பி.வி ] திரவத்தினை ஹெக்டேருக்கு @500 புழு சமன் அளவுடன் பருத்தி விதை எண்ணெய் 300 கிராம் அளவில் கலந்து மாலை நேரத்தில் தெளிக்கவும்.
- எண்டோசல்ஃபான் @ 2 மி.லி/லிட்டர் கார்பரில் 2 கிராம்/லிட்டர் அல்லது பெசில்லஸ் துருஞ்ஜியென்சிஸ் @ 2 கிராம்/லிட்டர் அளவில் தெளிக்கவும்.

5. கார்னேஷன் ஈ,

சேதத்தின் அறிகுறிகள்

- கால்களற்ற ஈ புழுக்கள் இளஞ்செடிகளின் வளரும் நுனிகளைத்துளையிட்டு சேதப்படுத்தும்.
- இளஞ்செடிகள் இறந்துவிடும்.

**கட்டுப்படுத்தும் முறைகள்**

- **எக்டருக்கு** 10 **கிலோ கார்பரில்** (அ) **ஃபோரேட் குருணை மண்ணில் இட்டு நீர்ப்பாய்ச்சவேண்டும்.**
- 1 **லிட்டர் தண்ணீரில்** 2 **மிலி மாலத்தியான் கலந்து தெளிக்கவும்.**
- **பூக்கள் மலராமலே அல்லது மொட்டுக்களிலோ விழுந்துவிடுகிறது.**
- **தக்காளி புள்ளி வாடல் வைரஸ் நோய் நெக்ரோட்டிக் புள்ளி வைரஸ் நோய்களைப் பரப்புகிறது.**

**பூச்சியின் விபரம்**

- **ஒல்லியான கருநிறப் பேன்கள்**

**கட்டுப்படுத்தும் முறைகள்**

- **எதிர்ப்புத்திறன் கொண்ட இரகங்களான சந்திரிக, பெங்களூர் லோக்கல். மஞ்சள் டபுள், எம்**7, **பங்கஸ் மற்றும் எல்லோ ஸ்டார்.**
- **பசுமைக்குடிலின் உட்புறம் மற்றும் வெளிப்புறங்களில் உள்ள களை மற்றும் வைரஸ் தாக்கிச் செடிகளை அகற்றவேண்டும்.**
- **மஞ்சள் அல்லது நீல நிற ஒட்டுப்பொறி வைத்து இலைப்பேன்களைக் கவர்ந்து அழிக்கலாம்.**
- 1 **லிட்டர் தண்ணீரில்** 1 **மிலி டைமீதோயேட்** (அ) **ஃபென்நைட்ரோதியான்** (அ) 2 **மிலி மாலத்தியான் தெளிக்கலாம்.**